**Deposition of Witness**
**(Chapter XXIII Code of Criminal Procedure )**
**In the Court of Judicial Magistrate, No.III, Cuddalore.**

| | |
|---|---|
| Case Number | : C.C.No.226 /2022 |
| Police Station | : Devanampattinam P.S. |
| Deposition of witness for Prosecution | : L.W.4 / P.W.3 |
| Name | : கௌதம் |
| Father Name/Husband Name | : வினாயகமூர்த்தி |
| Village | : |
| Cuddalore | : |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 விதிமுறைகளின் படி 03.03.2025 நாளாகிய இன்று திருமதி.L.Vanaja, B.A., B.L., நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.3, கடலூர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

3, 4 எதிரிகள் ஆஜர். 1,2 எதிரிகள் ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.317ன் கீழ் மனுத்தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதன்மை விசாரணை**

**01.** நான் தற்போது தாழங்குடாவில் வசித்து வருகிறேன். மீன்பிடிக்கும் வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கின் சாட்சியான அ.சா.1ஐ எனக்கு தெரியும். சாட்சி சதீஷ் என்பவரையும் எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். ஆஜரில் இல்லாத மற்றொரு எதிரிகளான வைமுருகன் மற்றும் வைமுருகனின் மற்றொரு மகனையும் தெரியும். ஆனால் அவருடைய பெயர் எனக்கு தெரியாது. சண்டை நடந்த நாளன்று நானும், எனது மனைவியும் டவுனுக்கு சென்றுவிட்டு வந்து வீட்டில் டி.வி பார்த்துக்கொண்டிருந்தபோது அப்போது அ.சா.1 கர்ணன் வீட்டில் ஒரே கும்பலாக இருந்தது. நான் பார்த்தேன். சண்டை என்று சொன்னார்கள். வழக்கு பற்றிய விவரம் எதுவும் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**அரசு தரப்பில் சாட்சி பிறழ்சாட்சியாக அறிவிக்கக்கோரி அனுமதி கோரப்பட்டது, சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

**02.** நான் எந்த தேதியில் டவுனுக்கு போனேன் என்ற தேதி விவரம் எனக்கு தெரியாது. நான் டவுனுக்கு சென்றுவிட்டு மதியம் 12.30 -1.00 மணியளவில் வீட்டிற்கு வந்துவிட்டேன். அ.சா.1 கர்ணன் வீடு எங்கள் வீட்டிற்கு 2 வீடுகள் தள்ளி பக்கத்தில் உள்ளது. என் வீட்டிற்கும் அ.சா.1 வீட்டிற்கும் 10 மீட்டர் தூரம் இருக்கும். அ.சா.1ன் வீட்டில் சண்டை நடந்தபோது நான் சென்றபோது அ.சா.1ன் வீட்டில் அ.சா.1 மற்றும் அவரது அம்மா, அக்கா மற்றும் பொதுமக்கள் இருந்தார்கள்.

**03.** நான் அ.சா.1ஐ பார்த்தபோது காயங்கள் எதுவும் இல்லை. எங்கள் ஊரில் உள்ள முருகம்மாள் என்பவர் இறந்தது பற்றி எனக்கு தெரியாது. எங்கள் வீட்டிற்கும் அ.சா.1 கர்ணன் வீட்டிற்கும் சண்டை நடந்தால் சத்தம் கேட்குமா என்றால் வெளியில் இருந்தால் சத்தம் கேட்கும். ஆஜர் எதிரிகள் உங்கள் உறவுகாரர்களா என்றால் இல்லை. பிச்சாண்டி என்பவரை எனக்கு தெரியும்.

**04.** கடந்த 05.02.2022 ம் தேதி மதியம் 02.30 மணியளவில் நானும், எனது மாமா பிச்சாண்டியும் வலைப்பின்னும் கட்டிடம் அருகே வந்தபோது ஆஜர் எதிரிகள் சாட்சி அ.சா.1யும், சதீஷையும் அசிங்கமாக திட்டி கையாலும், கட்டையாலும் தாக்கினார்கள் என்றாலும், அப்போது சதீஷ்க்கு முகத்தில் அடிப்பட்டு ரத்தம் வந்தது என்றாலும், கர்ணனுக்கு தோள்பட்டையில் அடிப்பட்டிருந்தது என்றாலும் சரியல்ல. நான் சம்பவத்தை நேரில் பார்த்து விலக்கிவிட்டுவிட்டு அனைத்து விவரங்களையும் போலிசாரிடம் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்றுவதற்காக பிறழ்சாட்சியாக மாறி பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சண்டையை பற்றி நேரிடையாக எனக்கு எதுவும் தெரியாது.

Taken down by me in the presence of Accused, and read over to the witness and admitted by her/him to be correct.

(S/d. L.Vanaja, B.A.,B.L.,)
Judicial Magistrate No.III
Cuddalore.